Registered in a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04

விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (19 - 03 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை 29

## சம்பளம் இல்லை பத்திரிகையில் போடுங்கோ

(யாழ்ப்பாணம்)

யாழ். வீடமைப்பு திணைக்கள அலுவலகத்தினுள் நுழைய முன்னர் அங்கிருக்கும் சிற்றூழியர்கள் ''சம்பளம் இல்லை, பத்திரிகையில் போடுங்கோ'' எனபத்திரிகையாளர்களைக் கண்டதும் உரத்துக் குரல் கொடுப்பது சகஜமாக மாறிவிட்டது. இவர்கள் மேலும் தமது நிலைமை பற்றி விளக்கும்போது கடந்த எட்டுமாத காலமாக தமக்கு சம்பளம் எதுவும் இல்லை (4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மாவட்டத்தில் இராணுவத்தால்

# இரு தினங்களில் 14 தமிழர் கொலை

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் இருதினங்களில் பன்னிரெண்டு தமிழர்களை சிறிலங்கா இராணுவம் வெட்டியும், சுட்டும் கொலை செய்தது: இருவரைப் படுகாயப்படுத்தியது. இந்தச் சம்பவம் கடந்த பதின்மூன்றாம், பதின்நான்காம் திகதிகளில் இடம் பெற்றது.

கடந்த 14ஆம் திகதி இளக்கந்தை, மரவட்டைகுளம், பள்ளவெளி, பாட்டாளிபுரம், நல்லூர், மட்டக்களி ஆகிய வேடுவ மக்கள் வாழும் வடக்கு - கிழக்கில் பகுதிகளைச் சுற்றிவளைத்து தேடுதல் நடாத்திய சிறிலங்கா இராணுவத்தினர் இப்பகுதிகளைச் சேர்ந்த பத்து பொது மக்களை சுட்டுக் கொலை செய்ததுடன் இருவரை படுகாயப்படுத்தினர். கொலை செய்யப்பட்டவர்களில் ஆறு பேர் இனம் காணப்பட்டுள்ளனர்.

தங்கராசா மகேந்திரன் வயது 30), கந்தசாமி சங்குபதி (வயது 40) அழகையா பாரதிராசா(வயது 30), கதிர்காமத்தம்பி ஞானம் (வயது 30), கணபதி கந்தசாமி (வயது 45), நாகப்பன் தியாகராசா (வயது 30) ஆகியோரே அடையாளம் காணப்பட்டவர்களாவர். மேலும் அ. ஜேர்ஜ்பர (4ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் செங்கதிருக்கு வடமராட்சி மக்கள் அஞ்சலி

(செ. த. மை)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகப் பிரசாரப் பொறுப்பாளர் மேஜர் செங்கதிரின் மறைவுக்கு வடமராட்சிப் பகுதி மக்கள் நேற்றுமுன் தினம் தங்கள் வீர அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

வல்வெட்டித்துறைச் சந்தியில் புலிச் சின்னத்திலுள்ள கம்பத்தில் புலிக்கொடிஅரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தது.

வடமராட்சிப் பகுதியில் கறுப்புக் கொடிகளும், மகர தோரணங்களும் தொங்க விடப்பட்டிருந்தன. கடைகள், வர்த்தக நிலையங்கள் மூடப்பட [illegible]



## புடலங்காய்க்குள் பற்றறி ஆசிரியரை இராணுவம் நையப்புடைத்தது

(யாழ்ப்பாணம்)

புடலங்காயினுள் பற்றறி கொண்டுவந்த பாடசாலை ஆசிரியர் ஒருவர் வவுனியாத் தடைமுகாமில் சிறிலங்கா இராணுவத்தினரால் நையப் புடைக்கப்பட்டுள்ளார்.

புடலங்காயைக் கீறி அதனுள் பற்றறிகளை மறைத்துக்கொண்டு வந்த பிரபல கல்லூரி ஆசிரியர் ஒருவர் நேற்றுமுன்தினம் வவுனியா தடைமுகாமில் சிறிலங்கா இராணுவத்தினரிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டபோது தனது உத்தியோக அடையாள அட்டையைக் காண்பித்துள்ளார்.

அதைப் பார்த்ததும் ஆத்திரமுற்ற இராணுவத்தினர் இவரைக் கடுமையாகத் தாக் (4ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வீச்சை நிறுத்த வாசுதேவா கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப்பகுதியில் கடந்த இரு மாதங்களில் மட்டும் இருநூறுக்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் விமானக்குண்டுவீச்சுக்குப் பலியாகியுள்ளனர் என நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார நேற்றுக் கொழும்பில் செய்தியாளரிடம் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் சிறிலங்கா அரசு குண்டுவீச்சுக்களை உடனடியாக நிறுத்தி விட்டு அமைதிப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண் (4ஆம் பக்கம் பார்க்க)

## 25 தமிழர் ஒல்லாந்தினால் திருப்பி அனுப்பப்பட்டனர்

(கொழும்பு)

ஒல்லாந்தில் இருந்த 25 இலங்கைத் தமிழ் இளைஞர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

போலி விசாக்களுடன் ஒல்லாந்துசென்ற இந்த 25 தமிழ் இளைஞர்களையும் ஒல்லாந்து குடியேற்ற குடியகல்வு அதிகாரிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பியிருந்தனர்.

இவர்களைக் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சிறிலங்கா இரகசியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## மட்டு.பல்கலைக்கழகத்திற்கு ஐந்து கோடி ரூபா நட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திற்கு கடந்த காலங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் ஐந்து கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என உபவேந்தர் சந்தானம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வரும் மே மாதத்தில் இருந்த வர்த்தகம், வணிகம், முகாமைத்துவம் ஆகிய துறைகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். இந்த விரிவுரைகள் ஆங்கிலத்திலும், தமிழிலும் நடைபெறும் எனவும் தெரிவித்தார்.

## செஞ்சிலுவை கிளையில் அதிகார துஷ்பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளின் தவறான நடத்தைகள் தொடர்பான எழுத்துமூலத் தகவல்கள் சில கிடைக்கப்பெற்றுள்ளன.

சிரேஷ்ட நிர்வாகிகள் சிலர் இச் சங்கத்தின் பெயரைப் பயன்படுத்தி பல முறையற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகின்றது அதிகார துஷ்பிரயோகம் நன்னடத்தை பிறழ்மை, பொதுச் சொத்துக்களை தமது தேவைக்குப் பயன்படுத்துதல் சங்கத்தின் நோக்கத்தை மாசுபடுத்துதல் போன்ற விடயங்களில் இந்த உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## காங்கேசன் ஊழியர்களுக்கு இடமாற்ற உத்தரவு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்து ஆலையில் கடமையாற்றிய கட்டடத் தொழிலாளர்களை தென்பகுதிக்கு இடமாற்றம் செய்வதற்கு சீமெந்துக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகம் முயற்சிக்கின்றது.

கொழும்பில் குறிப்பிட்ட சில முக்கிய கட்டடத் தொகுதிகளை அவசரமாக திருத்தி அமைப்பதற்கும், பராமரிப்பதற்காகவும் இந்த கட்டடத் தொழிலாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வைத்தியசாலைக்கான பயிலுநர் நிலை

# வைத்தியர்கள் வராமையினால் சேவை விரிவு படுத்துவதில் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்ட பயிலுநர்நிலை மருத்துவர்கள் பலர் சேவைக்கு சமுகமளிக்கவில்லை. இதனால் இவ்வைத்தியசாலையில் மருத்துவ சேவையை விரிவுபடுத்துவதில் சிரமங்கள் தோன்றியுள்ளன.

இந்த வைத்தியசாலைக்கு இவ்வருடம் போதனாவைத்தியசாலைகள் அமைச்சினால் சுமார் 28 பயிலுநர் நிலையிலான மருத்துவர்கள் நியமிக்கப்பட்டனர். ஆனால் இவர்களில் 18 வைத்தியர்கள் மட்டுமே தற்போது இவ்வைத்தியசாலையில் சேவையாற்றுவதற்கு முன்வந்துள்ளனர். ஏனையோர் இப்பகுதியில் நிலவும் அசாதாரண நிலைமைகளைக் காரணம் காட்டி தென் (4ஆம் பக்கம் பார்க்க)

## ஓய்வூதிய வவுச்சர்கள் செயலகம் வந்து சேரவில்லை

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டிற்கான ஓய்வூதிய வவுச்சர்கள் இன்னும் யாழ். செயலகத்திற்கு வந்து சேரவில்லை இதேவேளை புகையிரத ஊழியர் ஜனவரி மாத ஓய்வூதிய வவுச்சர்கள் வந்துள்ளதாக செயலக கணக்காளர் தெரிவித்தார். (4ஆம் பக்கம் பார்க்க)

## நீண்டதூர ஷெல்தாக்குதல்

(வவுனியா)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவ முகாம்களிலிருந்து ஆட்லறி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றது.

இத்தாக்குதலினால், வவுனியா நகரப் பகுதியிலிருந்து சுமார் 15 மைல் தூரமுள்ள பகுதிகளில் மேற்படி ஷெல் வீழ்ந்து வெடிக்கின்றது.

கடந்த 16 ஆம் திகதி மடுக்கந்த இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் இரணை இலுப்பைக்குளம் பகுதியில் வீழ்ந்து வெடித்தன. இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் அறியப்படவில்லை.

## மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆஸ்பத்திரிக்கு எரிபொருள்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனைக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளில் எரிபொருள்களை வழங்குவதற்கு கூட்டுப்படைகளின் தலைமையகம் அனுமதிவழங்கியுள்ளது.

இவ் வைத்தியசாலையின் தேவைகளுக்காக 31 பீப்பா டீசல், 6 பீப்பா மண்ணெண்ணை, 3 பீப்பா பெற்றோல் ஆகியவற்றை மாதந்தோறும் பெற்றுக்கொள்ள முடியும். மேற்படி வைத்தியசாலையைப் பொறுத்தவரை சுமார் இருபது நாட்களுக்கு மட்டுமே இந்த எரிபொருள் போதுமானது என்று தெரி (4ஆம் பக்கம் பார்க்க)

## இரத்த தானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் பத்திரிசியார் விழாவை முன்னிட்டு இந்தப் பாடசாலையின் மாணவர்கள், இன்ரறக்ட் கழக பிரிவினரும், சமூகசேவை ஒன்றியமும் இணைந்து இரத்ததானம் ஒன்றை செய்துள்ளனர். இதில் சுமார் 38பேர் வரையில் இரத்ததானம் செய்தனர்.(க)

## வரி விளம்பரம்

### ஆங்கில கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப் பட்ட முறையிலும் உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப் படும் நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும் S. ஜெயராஜா C/o S. சந்தானந்தம் கிராம சேவை உத்தியோகத்தர், உடுவில் (உடுவில் மகளிர் பாடசாலைக்கு முன்பாக) (R-1154)

### தேவை

பாவித்த சம்போ, ஓடிக்கலோன், Gum (கம்), Vicks போத்தல், பவுடர் டப்பா, போல் பொயிண்ட் பேனா: சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும். எஸ். சத்தியன், 55, மணிக் கூட்டு வீதி, கொழும்பு ஸ்ருடியோ பின்புறம், யாழ்ப்பாணம்) (B 2169)

### நிர்வாகிகள் தெரிவு

(குருநகர்)

இளைக்கோட்டை, உயரப் புலம் ஐக்கிய சனசமூக நிலைய பொதுக் கூட்டம் சமீபகதில் நடைபெற்ற பொழுது கீழ்க்கண்டோர் நடப்பு வருட உறுப்பினர்களாக தெரிவாகினர்;

தலைவர்: திரு: ச. அடைக்கலமுத்து. உப தலைவர்: திரு. இ. செல்வரட்ணம், செயலாளர்: திரு. பொன்-பொன்ராசா, உப செயலாளர்: திரு. ஆ: ஆனந்தம், பொருளாளர்: திரு. ம. செலஸ்தீன், உப பொருளாளர்: திரு யோ. கீதபொன்கலன், கணக்குப் பரிசோதகர்: திரு ஏ. ஸ்ரனிஸ்லாஸ், 16 உறுப்பினர் நிர்வாகசபைக்குத் தெரிவாகினர். (21)

---

# நினைவஞ்சலி

வீரவேங்கை

❋ அறிவழகன் ❋

மனதில்: 06-03-1991

பொங்கி வரும் கடல் அலை
பொழிந்திருக்கும் தெங்கு
வன்னியில் வடிந்திருக்கும் நீர் வளம்
இதை வளமாக காத்திருக்கும் வயல்வெளி
இவ் வெளியில் வாழந்திடும் கால்நடை
இத்தனைக்கும் மேலாக எழுந்திருக்கும் கானகம்
அத்தனையின் பயன்களையும் ஆழமாக நேசித்து
ஆழ்ந்த பயனை அடைய வந்தவன் தான
எம் அணையா விளக்கு அறிவழகன்
இவன் கிண்டி விளையாடிய மண்
கிளிநொச்சி ஆனால்
ஆர்வமுடன் அணைத்ததுவோ மணலாறு
மணலாற்றில் அறிந்த மணமான வளங்களை
பயன்பாடு அடைய புறப்பட்ட புலிவீரன்
ஆரம்ப நிலையிலேயே அறியாமல்
சென்று விட்டான்

(B/2154)

- மணலாறு மக்கள்

---

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (T. R. R. O)

## பதவி வெற்றிடம்

**கணக்குப்பதியுநர்: (BOOK KEEPER)**

மேற்படி நிறுவனத்தில் கணக்குப்பதியுநர் ஒருவருக்கான வெற்றிடமுள்ளது விண்ணப்பிப்போர்

(i) Book Keepers' Final Examination சித்தி பெற்றவராகவும்

(ii) ஐந்து வருடங்கள் கணிக்கப்பெறத்தக்க நிறுவனத்தில் வேலை செய்தவராகவும்

(iii) கம்பெனிக் கணக்குகளை வைத்திருப்பதிலும் தயாரிப்பதிலும் ஆற்றலுள்ளவராகவும்

(iv) 25 - 40 வயதினராகவும்

(v) தெளிவான கையெழுத்துடையவராகவும் இருத்தல் வேண்டும்.

உரிய தராதர சேவைப் பத்திரங்களுடனும் அனுபவம் பெற்ற இரு குணச் சான்றிதழ்களுடனும் 21 03 91 அன்று காலை 11.00 மணிக்கு 106-4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மேற்படி நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிக்கவும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

106. 4 ஆம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்.

தலைவர்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.

(B-2145)

---





37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கு வடக்குப் பக்கமாக உள்ள மேல்மாடி) (B-2165)


---

தவக்கால சிறப்பு நிகழ்ச்சியாக
திருமறைக் கலாமன்றம் வழங்கும்

## சிலுவை உலா

(பக்தி, இசை, உரை, நாடகம்)

காலம்: 1991 பங்குனி
22, 23, 24.ஆம் திகதிகள்

நேரம்: மாலை 6-45 மணி

இடம்: திருமறைக் கலா மன்ற அரங்கு
238, பிரதான வீதி. யாழ்ப்பாணம்.

**பிரவேசம் இலவசம்**

ஆசனம் பதிவு செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் முன்னதாகத் தொடர்பு கொள்ளவும்.

B/2157

---



## நினைவு கூருகின்றோம்

### மார்ச் 19

1985ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
❋ பேரின்பம் (சுந்தரலிங்கம் பேரின்பராசா - தம்பிலுவில்)

1987ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
❋ தீபன் (வி. மகேந்திரராசா - சச்சிலம்பற்றை)

1988ஆம் ஆண்டு விநாயகபுரத்தில் வீரமரணமடைந்த
ரமணி (வேலுப்பிள்ளை ஜீவராசா - தம்பிலுவில்)
நிதி (செல்வநாயகம் கருணாநிதி - தம்பிலுவில்)

1989ஆம் ஆண்டு புலோலி புற்றளையில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட மோதலில வீரமரணமடைந்த
லெப்.பவான் (சரவணானந்தன் பவானந்தன் - பருத்தித்துறை)
றோசான் (நடேசு சிவதாசன் - புலோலி)
ஹரி (கனகவேற்பிள்ளை ஹரிகரன் - பருத்தித்துறை)

1990ஆம் ஆண்டு எமைப்பிரிந்த
லோறன்ஸ் (இராசலிங்கம் கணேசராசா - பாலையடி வெட்டை, மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

❋ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

❋ 1988ஆம் ஆண்டு இதே திகதியிலேயே மட்டக்களப்பில் அன்னைபூபதி தமது உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித்தார்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2149)

---

# 6 ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தாயின் மடியில்: 16 05-1974

❋

தாயக மீட்பில் 23-10-1990

## வீரவேங்கை நிர்மலன் (றஜீவன் தியாகராஜா)

23-10-1990 அன்று கட்டுவன் நேரடி மோதலில் வீரமரணமடைந்த எமது புத்திரன் வீரவேங்கை நிர்மலனின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று எமது இல்லத்தில நடைபெறும் இதில் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்மலன் வீடு.
கோப்பாய் தெற்கு, இருபாலை.

— பெற்றோர்

(B-2136)

## ✲ சிந்தனைக்கு ✲

சிறப்பு மிக்க நிகழ்வுகள் பல வேளைகளில் இன்னும் சிறு சந்தர்ப்பங்களிலிருந்து உதிக்கின்றன.

— லிவி


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 19-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த: பெ. எண் 05


# எதிர்க்கட்சிகளுக்கு ஒரு சந்தர்ப்பம்

சிறிலங்காவில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் எதிர்வரும் யூன் மாதம் 31ம் திகதிக்கு முன்னர் நடைபெறவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது இத்தேர்தல் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் இடையில் ஒரு பலப் பரீட்சையாக அமைவதோடு சகலரதும் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும் தேர்தலாகவும் அமையும் என்பதில சந்தேகம் இல்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்ற சூழலில் இருந்து மாறுபட்டதாக, அதே வேளை அத்தேர்தல் கால நிகழ்வுகளின் பிரதி பலிப்புகளுடன் இத்தேர்தல்கள் நடைபெறுகின்றன.

இந்தியஇராணுவம் இலங்கையில்தமிழ் பிரதேசங்களில் நிலை கொண்டிருந்த வேளையில், சிறிலங்காவில் இராணுவத்தினரதும் ஜே. வி. பியினரதும் நடவடிக்கைகளின் விளைவாக இரத்த ஆறு ஓடிக் கொண்டிருக்கும் போது அத்தேர்தல்கள் நடைபெற்றன பெருமளவில் மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. பல இடங்களில் தேர்தல் வன்முறைகள் நிகழ்ந்தன. பல தொகுதிகளில்-கொழும்பு, மாத்தறை, காலி மாவட்டம்- தேர்தல் முழுமையாகவே நடைபெறவில்லை இந்தநிலையில் ஆட்சியாளர்களின் யோசனைகளுடன் தேர்தல் நடைபெற்றது ஐக்கிய தேசியக்கட்சி தான் 'விரும்பியவாறு' வெற்றிபெற்றது.

ஆனால் அன்றிருந்த அரசியல் சூழ்நிலை இன்றில்லை; 1977ம் ஆண்டிற்குப் பிறகு ஐக்கிய தேசியக்கட்சிக்கு இன்றுள்ளது போன்றதொரு நெருக்கடி நிலை இருந்ததில்லை என்றே சொல்ல வேண்டும். தமிழருக்கு எதிரான போரால் நாட்டின் பொருளாதாரம் நலிவடைந்து விட்டது. உற்பத்திகள் முடங்கிவிட்டன. விலைவாசி என்றுமில்லாதவாறு ஏறிவிட்டது வெளிநாட்டுக்கடன் எல்லை கடந்து விட்டது. இவற்றால் மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகின்றது.

இவற்றிற்கும் மேலாக ஜே. வி. பி கிளர்ச்சியை அடக்கவென ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் இன்று ஆட்சியாளருக்குப் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளன.

ஜே. வி. பி கிளர்ச்சியை அடக்கி ஒடுக்க மேற்கொண்ட நடவடிக்கையில் கொல்லப்பட்ட அறுபதாயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள் யுவதிகளின் படுகொலைகளைக் கண்டித்து அவர்களது அன்னையர்கள் போர்க் கொடி தூக்கியுள்ளனர்.

அதேவேளை வளைகுடாப் போரின் போது ஐ. தே. கட்சி அமெரிக்க சார்பு நாடுகளுக்கு வசதிகள் அளித்துள்ளதால முஸ்லிம்கள் அதிருப்தியடைந்து உள்ளார்கள். முஸ்லிம்கள் பலமான எதிர்ப்புக் காட்டிய போதும் அரசாங்கம் அதனைப் பொருட்படுத்தாமையால் ஐ. தே. கட்சி மீது முஸ்லிம்கள் நம்பிக்கை இழந்துள்ளார்கள். இதன் காரணமாக கடந்த காலத்தில் ஐ தே. கட்சிக்கு முஸ்லிம்கள் மத்தியில் உள்ள செல்வாக்கு வீழ்ச்சி கண்டுள்ளது.

எதிர்க்கட்சிகளும் இந்நிலையை ஓரளவு உணர்ந்துள்ளதாகத் தெரிகின்றது ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் கூட்டணி அமைத்து போட்டியிடுவதற்கான முயற்சிகள். மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கூட்டணிக்கு நவசமசமாஜக்கட்சி உட்பட இடதுசாரிக் கட்சிகளும் தமது ஒப்புதலை அளித்துள்ளன.

இவ்வாறான சாதக சூழ்நிலை இருப்பினும் எதிர்க்கட்சிகள் உட்பூசல் நிறைந்தவை அவை தமக்குள் மோதிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளுதல் மிகவும் சிரமமான விடயமாகும்.

அதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சியுடன் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தேர்தல் கூட்டு ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இ. தோ. தொ. காங்கிரசின் கூட்டு ஐக்கிய தேசியக்கட்சியைப் பொறுத்து மிகவும் இலாபகரமானதாகும்.

இன்றுள்ள அரசியற் சூழல் எதிர்க்கட்சியைப் பொறுத்து முன் எப்பொழுதும இல்லாத அளவில் ஐக்கிய தேசியக்கட்சியைத் தோற்கடிக்க நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது என்றே சொல்ல வேண்டும். ஆனால் ஐக்கிய தேசியக்கட்சியை நீண்டகாலமாக ஆட்சியில இருந்தமையாலும், மாற்றி அமைக்கப்பட்ட தேர்தல் முறையினாலும் இலகுவில்தோற்கடித்துவிட முடியாது. அத்தோடு அவர்கள் தேர்தல் தில்லு முல்லுகளைத் திறம்படக் கையாளக் கூடியவர்கள். இந்நிலையில், எதிர்க்கட்சிகள் தமது முரண்பாடுகளை மறந்து ஒன்றுபட்டு செயற்பட்டாலே வெற்றிபெற முடியும். இம்முறையும் எதிர்க்கட்சிகள் வெற்றிபெறும் சந்தர்ப்பத்தை நழுவவிட்டால அவர்களின் எதிர்காலம் தொடர்ந்தும் இருளானதாகவே இருக்கும்.

மருதங்கேணி ஆஸ்பத்திரியில்

# நிரந்தர வைத்தியர் இல்லை; நோயாளருக்கு உணவும் இல்லை

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலை வாரத்தில் இரண்டு நாட்கள் மூடப்பட்டுள்ளது. அத்துடன் வைத்தியசாலையில் தங்கியிருக்கும் நோயாளர்களுக்கு உணவு எதுவும் வழங்கப்படுவதில்லை.

வைத்தியசாலையின் சமயலறை திறக்கப்படாததினால், நோயாளர்கள் சுடுநீரைக் கூடப் பெறுவதற்குப் பெரும் சிரமப் படுகிறார்கள்; இவ்விடயம் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டும், இதுவரை நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

மேற்படி வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர்கள் நியமிக்கப்படாமையினால் வைத்தியசாலை வாரத்தில் இரண்டு நாட்கள் திறக்கப்படுவதில்லை.

இதனால் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்களும் வார்ட்டில் இருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களும் பாதிப்படைகின்றார்கள்.

இங்கிருந்த வைத்திய அதிகாரி ஓய்வு பெற்றமையடுத்து முள்ளியான் மருத்தகத்தில் கடமையாற்றும் வைத்தியரே குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும் வந்து கடமையாற்றி வருகின்றனர்.

மருதங்கேணிக்கும் முள்ளியான் மருத்தகத்துக்கும் இடையில் உள்ள தூரம் பத்து மைல்கள் இருக்கும். (36)

## போதைப்பொருள்பாவனை சட்டத்தரணிகள் கைது

(கொழும்பு)

போதைவஸ்து பாவனை தொடர்பாக கொழும்பில் இரண்டு சட்டத்தரணிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் இவர்களுடன் மேலும் அறுபேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. டெமற்றகொட, கொட்டாஞ்சேனை, இரத்மலானை ஆகிய இடங்களில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

## நெருப்புக்காய்ச்சலால இருவர் மரணம்

(ச. த. மை)

பாஷையூர்பகுதியல் நெருப்புக்காய்ச்சல் வேகமாகபரவி வருகிறது. இந்த நோய்பீடிக்கப்பட்டிருந்த இரு இளம் பெண்கள் மரணமடைந்துள்ளனர்.

செல்வி செல்வமலர் 20 வயது). செல்வி சரோஜினி மங்களிக்கா பீற்றர் (13வயது) இவ்விருவரும இந்நோய்க்குப் பலியானவர்களாவர்.

மேலும பாஷையூர் மத்தியூஸ் வீதியைச்சேர்ந்த செல்வி டயான ஜெனிபியதாஸ (20 வயது என்பவர் நெருப்புக்காய்ச்சலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார். மேலும் பலர் இக்காய்ச்சலுக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தபாற்கந்தோரில் பற்றுச் சீட்டு இல்லை

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு தபாற்கந்தோரில் க.பொ. த. உயர்தர பரீட்சை எடுப்பதற்கு காசு கட்டி எடுக்கும் பற்றுச்சீட்டு இல்லையென கையிரிக்கிறார்களாம்.

முள்ளியவளையில்மட்டுமே பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன ஆனால் முல்லைத்தீவு பிரதம தந்தோருக்குப் பதிலாக இயங்கும் புதுக்குடியிருப்பு தபாலலுவலகத்தில் பற்றுச்சீட்டு இன்மையால் அவல நிலை தொடர்கிறது. (58)

## வவுனியாவில் இராணுவத்தால் வீடுகள் தகர்க்கப்படுகின்றன

(வவுனியா)

வவுனியாவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டின கீழ் உள்ள தமிழ்க் கிராமப் பகுதிகளில் உள்ள வீடுகள் இராணுவத்தினராலும், ஊர்காவற்படையினராலும் தகர்க்கப்படுகின்றன.

கூமாங்குளம், உக்குளாங்குளம், கந்தபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள வீடுகள தகர்க்கப்படுகின்றன. குறிப்பிட்ட வீடுகளின் தளபாடங்கள் ஊர்காவற்படையினரால் அபகரிக்கப்படுகின்றன.

ஓடு, தளம் போன்ற பொருள்கள் சிங்களக் காடையர்களினால் சிங்களப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பத்தினியார் மகிழங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் பல வீடுகள் தகர்க்கப்படுவதாகவும், வீடுகளில் உள்ள பெறுமதி வாய்ந்த பொருள்கள் அபகரித்துச் செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தி)

## உணவு உற்பத்தியை ஊக்குவிக்க பணிப்பாளர் நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக சகல பாடசாலைகளிலும் விவசாயக் கழகங்களை அமைப்பதற்கு யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என சிறிலங்கா வானொலி அறிவித்தது.

இக்கழகங்கள் பாடசாலைகளில் தோட்டங்களை அமைத்து உள்ளூர் மரக்கறி வகைகளை உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் மூலம் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விவசாய அறிவு வளர்ச்சி அடையும் என்றும், வீடுகளில் மாணவர்கள் வீட்டுத்தோட்டங்களை அமைத்து உப உணவுச் செய்கையை மேற்கொள்ள வழி செய்யும் என்றும் யாழ் பிரதேசக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## இளைஞர் மீது கடற்படை தாக்குதல்

(புங்குடுதீவு)

கடந்த வெள்ளிக்கிழமை நெடுந்தீவில் இருந்து வந்த பயணிகள் படகை நயினாதீவில் கடற்படையினர் சோதனையிட்ட போது படகில் வந்த இளைஞர் ஒருவரை பலமாகத் தாக்கியுள்ளனராம். நெடுந்தீவைச் சேர்ந்த சகாயதேவன் என்ற இளைஞரே இவ்வாறு தாக்கப்பட்டவராவார். தாக்கப்பட்ட இளைஞரின் அடையாள அட்டையையும் படையினர் பறிமுதல் செய்துள்ளார்களாம் (22)

ஈராக்கிற்கு அமெரிக்கா

# தான் விற்ற பொருள்களையே குண்டுகளை வீசி அழித்தது

(வாஷிங்டன்)

ஈராக் குவைத்தைப் பிடிப்பதற்கு ஒரு நாளுக்குமுன் அமெரிக்கா 695, 000 டாலர் பெறுமதியான பொருள்களை ஈராக்கிற்கு விற்பனை செய்துள்ளது இத்தகவலை அமெரிக்க அரசாங்கத்தின் தஸ்தாவேஜுகளை மேற்கோள் காட்டி வாஷிங்டன் போஸ்ற் செய்தி வெளியிட்டுள்ளது.

றேகன் முதல் புஷ் வரையிலான காலப்பகுதியில், 1985 -1990க்கிடையில் 771 வகையான நவீன உபகரணங்களை அமெரிக்கா ஈராக்கிற்கு விற்பனை செய்துள்ளது. பல்கலைக் கழகங்களிலும், ஆய்வு கூடங்களிலும் இந்த உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்நிலையங்களை ஈராக்கின் இரசாயன ஆய்வு உற்பத்தி நிலையங்களின் ஒரு பகுதி என்று அமெரிக்காவும் அதன்சார்பு நாடுகளும் குண்டுகளை வீசித் தகர்த்ததாகப் பென்ரகன் யுத்த அறிக்கையை மேற்கோள் காட்டி வாஷிங்டன் போஸ்ற் மேலும் செய்தி பிரசுரித்துள்ளது.

## அமெரிக்க விண்கலத்தில் சோவியத் விண்வெளி வீரர்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் விண்வெளி கலத்தில் சோவியத் யூனியனின் விண்வெளி வீரர் ஒருவரை அனுப்ப தயாராக இருப்பதாக அமெரிக்க விண்வெளி ஏஜென்சியான நாசா அறிவித்திருக்கிறது.

சோவியத் விண்வெளி ஆய்வுக் கூடமான 'மீரில்' அமெரிக்க விண்வெளி வீரர் ஒருவரை அனுப்பவும் அமெரிக்கா தயாராக உள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில்

# யானைச் சின்னத்தில் இ. தொ. கா. போட்டியிடும்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் ஐ. தே. கட்சியுடன் இணைந்து யானைச் சின்னத்தில் இ. தொ. கா. போட்டியிடும் என்று முக்கியஸ்தர் ஒருவரை மேற்கோள் காட்டி ஏஜென்ஸி செய்திகள் கூறின.

இதேவேளை மலையக மக்கள் முன்னணி சுயேட்சைக் குழுவாக போட்டியிடவுள்ளதாகத் தெரிகிறது. தொழிற்சங்கம் அரசியற் கட்சிகளிடையே போட்டித் தவிர்ப்பை ஏற்படுத்துவதுடன் ஒன்றிணைந்ததானவகையில் சுயேட்சைக்குழுவை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படுவதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் விடுத்த அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது.

# ஆயுதப்படை அதிகாரிகள் கொள்ளை தொடர்பாக கைது

(கொழும்பு)

விஷேட பொலிஸ் அதிரடிப் படை இன்ஸ்பெக்டரும், இராணுவ மேஜர் லெப்டினன் ஒருவரும் பொலிஸ் ரோந்துப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்ச்சியான பல திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆயுதங்கள், சீருடைகள், பணம், வாகனங்கள், நகை ஆகியன இவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டைப்பகுதி

# மாணவர்களில் அறுபதுவீதம் பல்நோயால் பாதிப்பு

வட்டுக்கோட்டைப் பகுதி பாடசாலை மாணவர்களில் அறுபது வீதத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பல்நோய்களால் பாதிக்கப் பட்டுள்ளனர். குறிப்பாக பற்சூத்தை. முரசு கரைதல் ஆகிய நோய்களாலேயே இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வட்டுக்கோட்டை பதிவு செய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர் திருமதி எஸ் சுப்பிரமணியம் அவர்கள் இப்பகுதி பாடசாலைகளில் மேற்கொண்ட வைத்தியப் பரிசோதனைகளின் போதே மேற்கண்ட விடயம் தெரியவந்துள்ளது. (20)

# சுவர் இடிந்து வீழ்ந்ததால் கால் துண்டிக்கப்பட்டது

(நமது நிருபர்)

பேரர்விமானங்களின்குண்டு வீச்சால் சேதமடைந்திருந்த சுவர்மீது ஏறியவர், சுவர் இடிந்துவீழ்ந்ததால் படுகாயமடைந்தார். கம்பர்மலையைச்சேர்ந்த இராசதுரை நாகலிங்கம் (வயது 48) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

தற்பொழுது மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள நாகலிங்கத்தின் ஒரு கால் அகற்றப்பட்டுள்ளது.

ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன்

# உள்நாட்டுப்போரை நிறுத்தும்வரை போர் நிறுத்தமில்லை -ஜேம்ஸ் பேகர்

(வாஷிங்டன்)

"ஈராக்கிய ஜனாதிபதிசதாம் ஹுசைன் தனது மக்களுக்கு எதிராக நடாத்தும் போரை நிறுத்தாதவரையில் வளைகுடாவில்போர்நிறுத்தம் செய்யமுடியாது" என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேகர் தெரிவித்தார்.

மேற்காசியப் பயணத்தை முடித்துக்கொண்டு வாஷிங்டன திரும்பிய ஜேம்ஸ்பேகர் ஏ.பி.ஸி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

ஈராக்கிய கிளர்ச்சிக்காரர்களுக்கு அமெரிக்கா ஆயுதங்களைக் கொடுக்காது என்பதை மீண்டும் அவர்வலியுறுத்தினார். ஆனால் ஜனாதிபதி சதாம் ஹுசைன் பதவியில் இருந்து இறக்கப்படுவதை அமெரிக்கா வரவேற்கும் என்றும், வளைகுடாவில் அமைதியை உண்டாக்க இந்தப்போர் வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

# பதினொரு ஆதி வாசிகள் குடிசையுடன் எரிக்கப்பட்டனர்

(போபால்)

மத்தியபிரதேசமாநிலத்தில் கிராமமொன்றில் ஆதிவாசிகள்குடிசையொன்றினை எரித்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பதினொருபேர் எரிந்து சாம்பலாய் மாண்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மத்தியபிரதேசத்திலுள்ள பகுதல் கிராமத்தில் ஆதிவாசி குடும்பம்ஒன்றைச் சேர்ந்த பதினொருபேரை இனந்தெரியாத நபர்கள் சிலர் குடிசையுடன் வைத்து தீ வைத்துள்ளனர்.

இவர்களைக் காப்பாற்ற உதவிக்கு வந்தவர்கள்மீதும் வன்முறைமேற்கொள்ளப்பட்டது. அத்துடன் உதவிமேற்கொள்ளப்படாதவாறு குடிசையைச் சுற்றிலும் காவலும் போடப்பட்டிருந்தது.

இதேநேரம் மத்தியப் பிரதேசமாநில பொலிசார் இத்தீவைப்பு சம்பவமானது பழைய பகைமையின் வெளிப்பாடாக உள்ளது என்று தெரிவித்தனர் ஆனால் சந்தேகத்தின் பேரில் இதுவரை ஒருவரும் கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

குண்டின் அதிர்வினால்

# கிளாஸ் வெடித்துச் சிதறியது; இளைஞர் கண்ணை இழந்நார்

(சச்சமோட்டை)

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன குண்டு வெடிப்பில் பலியான தினத்தன்று ஹோட்டல் ஒன்றில் தேநீர் பருகிக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் குண்டின் அதிர்ச்சியினால் தனது கண்ணை இழந்தார். இது தொடர்பாக தெரியவருவதாவது குண்டுவெடிப்பின் போது கையில் வைத்திருந்த தேநீர் கிளாஸ் வெடித்துச் சிதறியதால் தனது ஒரு கண்ணை இழந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. குண்டு வெடித்த இடத்தில் இருந்து ஹோட்டல் 200 யார் தொலைவில் இருந்தது குறிப்பிடத்தக்கது. தற்போது அவ்விளைஞர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (43)

# ஊழியர்களின் ஒய்வால் விண்ணப்பங்கள் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

பத்து வருட சேவைக்காலம் முடிந்தவர்களுக்கான ஓய்வூதியம் பெறும் திட்டத்தில் பிறப்பு, இறப்பு அத்தாட்சிப்பத்திரம் பதிவு அலுவலகம், மாவட்டக் காணிக்கந்தோர் ஆகியவற்றில் பெருந்தொகையான விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்றன.

இந்த ஒய்வூதியத் திட்டத்தின் பலனாக இவ்வருடம் தை மாதம் முதலாம் திகதியில் இருந்து காணிக்கந்தோரிலிருந்து பன்னிரெண்டு உத்தியோகஸ்தர்கள் ஒய்வூதியம் பெற்றுவிட்டனர். மாவட்டப் பிறப்பு, இறப்புக் காரியாலயத்திலிருந்து ஐந்து உத்தியோகஸ்தர்கள் ஒய்வுபெற்றுவிட்டனர். இதனால் தேங்கிக்கிடக்கும் விண்ணப்பங்கள் பதிவு வேலை முடியாதநிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இருந்தும் தற்போது பதிவு வேலைகள் துரிதப்படுத்தப்பட்டிருப்பதுடன், 1990 ஆம் ஆண்டுக்கான காணி உறுதி விண்ணப்பங்களும் இப்பொழுது ஏற்றுக்கொள்ளத் தொடங்கியிருப்பதாகக் காணி பதிவு அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டது. (லோ)

# அரச அதிபர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்துக்குப் பத்துக் கோடி ரூபா வந்து சேர்ந்துள்ளதென்ற செய்தியை யாழ். அரச அதிபர் அடியோடு மறுத்துள்ளார். தாம் யாழ். மாவட்டத்தில் அத்தியாவசிய தேவைகளுக்கான அவசரக் கொடுப்பனவுகளுக்கென 140 மில்லியன் ரூபா கேட்டிருந்த போதிலும் அதில் ஒரு பகுதி கூட இன்னும் எமக்கு வரவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (லோ)

# அநேக தேசியகட்சிகள் தனித்துப் போட்டியிட முடிவு

(டில்லி)

இந்தியப் பொதுத்தேர்தலில் தேசியமுன்னணி மற்றும் இடதுசாரிக்கட்சிகள் தவிர்ந்த ஏனைய கட்சிகள் அனைத்தும் தனித்துப்போட்டியிட முடிவு செய்துள்ளன.

இதனால் 1989 ஆம் ஆண்டு தேர்தலில் இருந்த நேரடிப் போட்டிகள் இந்தமுறை இடம்பெறமாட்டாது.

தேசியமட்டத்திலான எந்த ஒரு கட்சியுடனும் தேர்தல் கூட்டு செய்யப்போவதில்லை என்று இந்திரா காங்கிரஸ் கட்சியும், பாரதிய ஜனதாக் கட்சியும் தெரிவித்துள்ளன.

சிறிலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபன

# முன்னாள் அதிகாரிகள் மீது விசாரணைநடத்தகோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் உயர் அதிகாரிகள் சிலர் கூட்டுத்தாபன நிதிகளையும் சொத்துக்களையும் தவறான வழியில் பயன்படுத்தி ஊழல்கள் புரிந்தமை பற்றி உடனடியாக விசாரணை மேற்கொள்ளுமாறு மேற்படி கூட்டுத்தாபனத்தின் தற்போதைய தலைவர் தகவல் துறை ராஜாங்க அமைச்சரின் செயலாளருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிதியைத்தவறான வகையிற் பயன்படுத்தியமை, சில நிறுவனங்களுடன் சட்ட விரோதமான முறையில் கொடுக்கல் வாங்கல் செய்தமை, கணக்குத் தீர்வை பற்றிய விபரங்களை வெளியிடத்தவறியமை போன்ற குற்றச் சாட்டுகள் தொடர்பாக உரிய விபரங்கள் அடங்கிய எழுத்து மூலமான முறைப்பாடுகள் கூட்டுத்தாபனத்தலைவரின் வேண்டுகோளை அடுத்து அமைச்சின் செயலாளருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் சிறிலங்கா கூட்டுத்தாபனத்தின் பெயரைப் பயன்படுத்தி மிகக் குறுகிய காலத்தில் செல்வம் திரட்டியிருக்கிறார்கள் என்பதும் தெரிய வந்துள்ளது.

சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டு வழக்கு விசாரணை நடாத்தப்படும் என்று தகவல் துறை ராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

# சிறுமி மரணம்

(யாழ்ப்பாணம்)

ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அபேதா (வயது 3) என்ற சிறுமி நேற்று அங்கு மரணமடைந்தார்.

இவரும் இவரது தந்தையும் விறகேற்றும் போது ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த நிலையில் நேற்று முன்தினம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (க)

குண்டு விச்சை

டும் எனக் குறிப்பிட்டதுடன், பொருளாதாரச் சீர்குலைவுக்குள் மக்களை இட்டுச்சென்று கொஞ்சம் கொஞ்சமாக ஒழித்துக் கட்டுவது அர்த்தமற்ற காரியம் எனவும் கூறியுள்ளார்.

காங்கேசன்

தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தெரிகின்றது.

மேலும் கடந்தமாதம் இக்கூலையின் பொறியியலாளர்கள் பலரை தென்பகுதிக்கு கடமையாற்றுவதற்கு வரும்படி அழைத்திருந்தமையும் பின்னர் வந்த அறிவித்தல் ஒன்றின்படி தென்பகுதிக்கு கடமைக்கு வராத்தவறிய பொறியியலாளர்களுக்குரிய சம்பளத்தை நிறுத்தும்படியும் மேற்படி ஆலையின் நிர்வாகத்தை கோரப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பளம் இல்லை

இதனால் தாம் விறகு கட்டி விற்று காலத்தைப் போக்குவதாகவும் தினமும் முக்கால் பட்டினியில் வாழ்வதாகவும் கூறினர்.

இதேவேளை வீடமைப்புத் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர் ஒருவர் கூறுகையில் தாம் முன்பு யாழ் மாவட்ட வீடமைப்புத் திணைக்களத்தில் சேவையாற்றியதாகவும் ஆனால் இப்பொழுது முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மாற்றம் கிடைத்துள்ளது என்றும் யாழ் மாவட்டத்தில் சேவையாற்றியதற்கு எனக்கு கிடைக்க வேண்டிய சம்பளம் இன்னும் கிடைக்கவில்லை எனவும் கூறினார். (லோ)

வைத்தியர்கள்

பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மருத்துவ மனைகளில் சேவையாற்றுகின்றனர். இவர்களின் இந்த நடவடிக்கையால் இவ்வைத்தியசாலையின் மருத்துவர்களுக்குரிய பற்றாக்குறையை நீக்கிவைக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது. (க)

இரு தினங்களில்

பிஞ்சன் (வயது 30) து. சுந்தரலிங்கம் (வயது38) ஆகியோர் காயமடைந்தனர்.

இதேவேளை கடந்த13 ஆம் திகதி பள்ளிக் குடியிருப்பில் இருந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினர் சம்பூர் என்ற இடத்தைச் சேர்ந்த க. நாகராசா (வயது 40) என்பவரையும் மட்டக்களப்பைச் சேர்ந்த ப. ஞானம் (வயது 29) என்பவரையும் கட்டுக் கொலை செய்தனர்.

ஒய்வூதியம்

இருந்தும் அனைத்து வவுச்சர்களும் இருநாட்களுக்குமுன் வடபகுதிக்கு வந்திருந்த குமண என்ற கப்பலில்வரும் என எதிர்பார்த்திருந்ததாகவும் ஆனால் இக்கப்பல் பருத்தித்துறை கடற்பரப்பிலிருந்து திரும்பி முல்லைத்தீவு நோக்கி சென்று விட்டதாகவும் அவர் கூறினார்.

ஆகவே யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான வவுச்சர்கள் வருவதற்கு மேலும் சில நாட்கள் தாமதமடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது (லோ)

ஆசிரியரை

கியதுடன், அலுவலக அடையாள அட்டையை இவரைக் கொண்டு விழுங்கவும் வைத்துள்ளனர். (மு)

# வீடுகள் பாரிய சேதம்

(கொழும்பு)

ஹவ்லொக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக பல வீடுகள் பாரிய சேதமடைந்துள்ளன. அந்த வீடுகளைப் புதிதாகக் கட்டுவதைத்தவிர வேறு வழியில்லை என்று பொறியியலாளர்கள் கூறியுள்ளார்கள்.

மதிப்படுத்தப்பட்ட

விக்கப்படுகின்றது. மேலும் கப்பல் வருவதற்கு தாமதம் ஏற்படும் பட்சத்தில் வைத்தியசாலை இருளில் மூழ்கவேண்டிய ஆபத்தும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.